செ. கு. எண்:034 நாள் : 10.02.2014

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 10.2.2014

நாமக்கல் மாவட்டம், தேவராயபுரம் கிராமம், பன்னக்காரப்பட்டியைச் சேர்ந்த திருமதி மாரியாயி என்பவர் 30.12.2013 அன்று நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மனு கொடுக்க வந்த போது மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

சேலம் மாவட்டம், ஆத்தூர் நகரம், புதிய பேருந்து நிலைய பராமரிப்புக்காக 7.1.2014 அன்று மண் கொட்டிய போது அருகிலிருந்த மதில் சுவர் இடிந்து விழுந்ததில் திரு. பெருமாள் என்பவரின் மகன் கர்ணன் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை, சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையத்தில், 11.1.2014 அன்று மெட்ரோ ரயில் தொடர்பான பணி நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, கிரேன் விபத்து ஏற்பட்டதில் திரு. ரஞ்சித் பிஸ்வாஸ் என்ற தொழிலாளர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், சிலம்பிமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திரு. வேணுகோபால் என்பவரின் மனைவி சாந்தா 11.1.2014 அன்று மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாத திட்டத்தின் கீழ் பணியில் ஈடுபட்டிருந்த போது மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் நகரம், சாத்தூர் நகராட்சி கழிவு நீர் தொட்டியை 18.1.2014 அன்று சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த சாத்தூர் நகரைச் சேர்ந்த திரு. பாண்டி மற்றும் சிவகாசியைச் சேர்ந்த திரு. ஆரோக்கியராஜ் ஆகிய இருவரும் விஷ வாயு தாக்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகுந்த துயரமடைந்தேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9